# காலிங்கராயன் பாடல் - அ,பொ,கந்தசாமி.

பார்புகழும் கொங்கு நாட்டினிலே - திரு
பண்பானபூந்துறை வெள்ளோடு
கனகபுரமதில் சாத்தந்தைகுலத்தில்
கதிரவன் போலவே தான் பிறந்த
சேர்புகழ் நஞ்சைய கவுண்டன் மகனாக
சிறப்புடன் லிங்கையன் தோன்றினனே
அன்னவன் நற்பணி யான்பாட - எங்கள்
அண்ணன் கணபதிமுன் இருப்பார் -
எண்ணூறு ஆண்டுக்கு முன்பிறந்த - நல்ல
இளவல்காலிங்கன் நற்செயலால்
மண்ணுபுகழ்பெற்ற மகிமையினை - நம்ம
மக்களிடம் சொல்லவேண்டுமம்மா
காவிரியாற்றில் கரிகாலன் - அங்கு
கல்லணை கட்டினார் கொள்ளிடத்தில்
சோழவளநாடு தஞ்சை திரு ஆரூர்
சோறுண்டு வாழந்தது நாகபட்டணம்
கரிகாலன் அன்னையும் பெரியகுலக்கவுண்டச்சி
இரும்பிடர்த்தலையாரின் தங்கையம்மா
கல்லணைகட்டிட கொங்குப் பெருமக்கள்
கடியபணிகள் புரிந்திருப்பர்-
உழைப்பில் உயர்ந்தது கொங்குஇனம் - அன்று
ஊக்கத்துடன் பணி செய்திருப்பர்
களைப்பை அறியாது கண்ணும் கருத்துமாய்
கல்லணை கட்டத்துணையிருந்து
பணிகள் புரிந்திட்ட கொங்கின மக்களை
பாரதம் என்றும் மறக்காது.

பூந்துறை வெள்ளோடு - பூமலர்ந்த கனகபுரம்
சாந்துசவ்வாதுமணம் - சார்ந்திருக்கும்சர்வேஸ்வரன்
பூமாதேவிமண்ணு - அது
புகழடைந்ததுகன்னு
பிறப்பார்பலபேர்கள் - இறப்பார்சிலபேர்கள்

பெருப்பணி புரிந்தவர்கள் - வரலாற்றில்இடம்பெறுவர்
பூந்துறைநாட்டு மண்ணு - நம்ம. கொங்கு
இளம்வளருது கன்னு
சாத்தந்தைகுலத்தினிலே - சரித்திரத்துநாயகனாம்
நஞ்சையகவுண்டர் மகன் - நலம்புரிந்தகாலங்கனும்
பிறந்த பூந்துறைமண்ணு - எங்கும்
பெருமைப்பட்டது கன்னு
பள்ளிப்படிப்பினிலே - படுசுட்டிகாலங்கனும்
துள்ளிஎழுந்து தமிழ் - துரிதமாகக்கற்றவனாம்
கனகபுரத்து மண்ணு - அது
காளிங்கராயன் கன்னு
இருபதாம் வயதினிலே - இளவலுக்குமணமுடிக்க
பெரியவர்கள் ஒன்று கூடி - பேசுகிறார்சாவடியில்
லிங்கையனுக்கு பொன்னு - நாம
தேடவேனுமென்னு
என்றுமந்தபங்காளி - எழுந்துநின்று குரல்கொடுக்க
பங்காளிமனைவியம்மா - பருவதமும் எழுந்துநின்று
மாமன் வீட்டுப் பொன்னு - நாம
கேட்போமடா கன்னு
சுத்துப்பட்டு ஊர்களுக்கு - துரிதமாக சேதிசொல்லி
பங்கும் பங்காளிகட்கு - பாசமுடன் அழைப்புவிட்டார்
நஞ்சையகவுண்டர் தாங்க -
நல்மகனின்தந்தை வாங்க
வில்லுவண்டிசலங்கைவண்டி - மெத்தைவெச்சகுதிரைவண்டி
அழகான சாரட்டுவண்டி - அசைந்துவரும்டயருவண்டி
ரேக்ளாவண்டி பூட்டி - அங்கு
துளிர் பறக்குது சாட்டை
காங்கேயம்காளைகட்கு - கனதுளிர்கொம்பெடுத்து(சீவி)
ஆலாம்பாடி எருதுகளின் - அழகுக்கொம்பில் சலங்கைகட்டி
கழுத்தில் சலங்கைமாலை - அங்கே
கலகலக்குதுசாலை
அக்கக்கா பொன்னாத்தக்கா - அருக்காணி வேலாத்தக்கா
சின்னாத்தா சீராத்தக்கா - சீக்கிரம்தலைசீவிவாங்க

அம்மணியெல்லாம் வாங்க -

வெகுதுருசாகத்தான் நீங்க

கனகபுரத்தைவிட்டு - காளை மாட்டு வண்டியெல்லாம்

ஒன்றன்பின் ஒன்றாகவே - ஒருகாதம்ஒய்யாரமாய்

துருசுநடைபோட்டு - வெகு

தூரமதைக்கடந்து

பூந்துறை எழுமாத்தூர் - யோற்றும் தலையநல்லூர்(சிவகிரி)

தாமரைக்கரையூரும்(கொடுமுடி) தாண்டுதுபார்வண்டிகளும்

பொன்னுவீட்டைத்தேடி

ஆவுடையார்பாறை நாடி

பண்ணைகுலத்துத்தாய்மாமன் - பெரும்

பண்ணையம் வைத்துள்ளகோமான் - அவர்

பட்டாசாலையுள்ள - தொட்டிக்கட்டு வீட்டில்

பாசமாய் - உறவின்நேசமாய்

நங்கை கொழுந்திகள் அமர்ந்து - பல

நல்ல உரைகளைப்பகர்ந்து - அட

மச்சான் கொழுந்தனார் - அமருங்கள் என்றுமே

கூடினார் -- உரையாடினார்

பூந்துறை மச்சாண்டார் வாங்க - நம்ம

பதுப்பெண்ணைப்பாக்கனும் தாங்க - அய்யா

சந்தனம் மணக்க - வந்தினம்குவிக்க

அமர்ந்தார் - நெஞ்சுநிமிர்ந்தார்

சமையல் நடக்கின்ற இடத்தில் - பலர்

சலசலப் பேச்சுக்கும் மடத்தில் - நம்ம

லிங்கையன்மாமனை - சமைக்கின்றபண்டாரம்

கேட்டானே. --- ஒரு கேள்வியை

கிடாய்கள் பழக்கிய கவுண்டரா? இல்லை

மாடுபழக்கிய கவுண்டரா? என்றி

பண்டாரன் கேள்விக்கு - மாடுபழக்கியென

மாமனும் - பதில் - சொல்லவே

எருமை உழவுகள் ஒட்டுவோர் - நல்லஇனியஅரிசியை உன்பவர்

பசு.மாடுகவலைகள் பூட்டியோர்-மணக்கின்ற கம்மஞ்சோறுதிண்பவர்

ஆகவே - இவர்கட்கு - குறுவை அரிசியை

போட்டிடு - சமையல் நாட்டிடு

மாமாவும் சொன்னதை உணர்ந்து - அங்கு

மனம் நொந்த லிங்கையன் சினந்து

அண்ணனும் தங்கையே - பங்கும் பங்காளியே

வாருங்கள் - வண்டி - ஏறுங்கள்

பூந்துறை போனதும் கூடனும் - நாம்

புதியசபதத்தை ஏற்கனும்

வரலாறுகூறவே - பவானியில் அணை

கட்டுவோம் - புகழ் - நாட்டுவோம்

பவானியில் அணை கட்ட - தெய்வப்

பாம்புமுன்னேவழிகாட்ட

ஊராட்சிக் கோட்டையை(மலை) ஒட்டிய பாதையை

வாங்கினார் - விலைக்கு. தாங்கினார்

தடம்நூறுபவுனுக்கு - மலைநூறுபவுனுக்கு

வாங்கினார் - விலைக்கு தாங்கினார்

பொன்னுக்கேட்கப்போனபக்கம்

பொருத்தமில்லாமாமன் சொல்லால்

வாய்க்காலை வெட்டிவைச்சான் - கன்னையா. ஈரோடு

வளம்பெறவே வெச்சான்பாரு - பொன்னையா.

காலிங்கராயன்பூமி - இந்த பூமியை ஆளனும்சாமி

கொங்குநாட்டு மண்ணு. நம்ம

கொங்கன் வளரம் கன்னு

பவானி ஆற்றினிலே - படுகெட்டியாய் அணையைக்கட்டி

பாம்பு அதுமுன் நடக்க. காலிங்கனும் வாய்க்கால்வெட்ட

ஆசாரிகள் துணையோடு. அமைத்துவிட்டார் நீர்த்தடுப்பு (சட்டர்)

கரைகள் அமைத்துவிட்டார் கன்னையா.

காலிங்கனின் பணிபுரிந்தார் பொன்னையா.

கொங்குநாட்டு பூமி - நம்ம கொங்கினம் வளரசாமி

பூந்துறைநாட்டுமண்ணு. இங்கு. பூகழடைந்ததுகண்ணு

ஈரோடு பாதூரு ஊஞ்சலூர் வெங்கம்பூரு

கொடுமுடிக்கரைதாண்டி - ஆவுடையார்பாறைவரை

பன்னிரெண்டு ஆண்டுகாலம் கன்னையா. அவர்.

பட்டபாடு எப்படியிருக்கும் பொன்னையா.

அரையநாட்டு மண்ணு. மக்கள் அனைவர்வாழனும்கன்னு

காலிங்கராயன்பூமி. இந்த. பூமியை ஆளனும்சாமி

மஞ்சள் விளையுதடா - மாகரும்பு வளருதடா

கொஞ்சும் பயிர்நெல்வளர - செஞ்சுவச்சான்காலிங்கனும் - இதை

நெனைச்சு நாம பார்க்கனுமே கன்னையா.

நெஞ்சுநிறைய வாழ்த்தனுமே பொன்னையா

காலிங்கராயன் பூமி - இதைக்

காலம் சொல்லுது சாமி -

வாழ்வாங்கு வாழ்ந்த இனம் - வாழ்வளிக்கும் உழவரினம்

நலம்புரிந்த காலிங்கனைக்கன்னையா. நம்ம

நாட்டினர்க்கும் எடுத்துரைப்போம் சொல்லையா.

காலிங்க ராயன் பூமி - இதைக்

காலம் சொல்லனும் சாமி

பூந்துறை நாட்டு மண்ணு - இது

புகழ் பெருகனும் கன்னு.

✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧✧

அ.பொ. கந்தசாமி

அத்திப்பாளையம். அஞ்சல் 639 111

கரூர் மாவட்டம்

954324-254328

<u>வாழ்த்துக்களுடன்</u>

எஸ், சிவசண்முகபாலசுப்பிரமணியம்.

மூலனூர் கவுண்டர் வீடு.

சாலைப்புதூர்,

ஈரோடு மாவட்டம்